Dinamalar - 01/02/2024

# பொறியியல் கல்லூரிகளில் பி.பி.ஏ., பி.சி.ஏ., துவங்க எதிர்ப்பு

## தனியார் கல்லூரிகள் சங்கம் சார்பில் ரிட் மனு தாக்கல்

**கோவை, பிப். 1–**

தொழில்நுட்பம் சாராத பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புகள் தொடர்பான ஏ.ஐ.சி.டி.இ., அறிவிப்பை திரும்ப பெற வலியுறுத்தி, தமிழ்நாடு தனியார் சுயநிதி கலை அறிவியல் மேலாண்மை கல்லூரிகள் நலச்சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயர்கல்வித்துறையில், கலை அறிவியல் சார்ந்த கல்வி நிறுவனங்களை யு.ஜி.சி., எனப்படும் பல்கலை மானியக்குழுவும், பொறியியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களை ஏ.ஐ.சி.டி.இ., எனப்படும் அகில இந்திய தொழில்நுட்ப கல்விக்கவுன்சில் அமைப்பும் கட்டுப்படுத்துகிறது.

இந்நிலையில், தொழில்நுட்பம் சாராத பி.பி.ஏ., பி.சி.ஏ., ஆகிய படிப்புகளை பொறியியல், தொழில்நுட்ப கல்லூரிகளில் துவங்க ஏ.ஐ.சி.டி.இ., தரப்பில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேலும், இப்படிப்புகளை தற்போது நடத்தி வரும் கலை அறிவியல் கல்லூரிகளும் ஏ.ஐ.சி.டி.இ., ஒப்புதல் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு, கலை அறிவியல் கல்லூரிகள், கல்வியாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழ்நாடு தனியார் சுயநிதி கலை அறிவியல் மேலாண்மை கல்லூரிகள் சங்கம் சார்பில் கடந்த டிச., மாதம் இதுகுறித்த ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஏ.ஐ.சி.டி.இ., பொறுப்பாளர்களுக்கும் கோரிக்கையாகவும் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில், கடந்த, ஜன., 29 ம் தேதி பொறியியல் கல்லூரிகளில் தொழில்நுட்பம் சாராத படிப்புகளை துவங்குவது தொடர்பாகவும், கலை அறிவியல் கல்லூரிகள் பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புக்கு ஏ.ஐ.சி.டி.இ., அமைப்பிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்ற புதிய நடைமுறை சார்ந்த அறிவிப்புக்கு எதிராகவும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவில், ஏ.ஐ.சி.டி.இ., அறிவிப்பை திரும்பப்பெற்று ரத்து செய்யவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.